### சென்னை மண்டலத்திற்குட்பட்ட 5 மாவட்டங்களில்

# வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, செப்.11-

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தலைமையில், சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட 5 மாவட்டங்களில் நடைபெற்று வரும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் நிரந்தர வெள்ளத்தடுப்புப் பணிகள் குறித்து நீர்வளத்துறை பொறியாளர்களுடன் தலைமைச் செயலகத்தில் நேற்று (10.09.2024) ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

ஆய்வுக் கூட்டத்தில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள நீர்நிலைகளில் பருவமழைக்கு முந்தைய முன்னேற்பாட்டு பணிகளாக ரூ.38.50 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, முக்கிய பகுதிகளான வீராங்கல்ஓடை, ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் - அரும்பாக்கம் கால்வாய், பக்கிங்காம் கால்வாய், வேளச்சேரி ஏரி, கூவம் மற்றும் அடையாறு போன்றவற்றில் உள்ள மிதக்கும் தாவரங்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றினை இயந்திரங்களை பயன்படுத்தி அகற்றி சுத்தம் செய்யும் பணிகள் வருகிற 30.09.2024க்குள் முடிக்குமாறும் மேலும் நிரந்தர வெள்ளத்தடுப்புப் பணிகளாக ரூ.590 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, முக்கிய பகுதிகளான தணிகாச்சலம் கால்வாய், மணப்பாக்கம் கால்வாய், மாதவரம் ரெட்டேரி மற்றும் கெருகம்பாக்கம் கால்வாய் போன்றவற்றில் நடைபெற்று வரும் பணிகள் அனைத்தும் வருகிற 30.09.2024க்குள் முடிக்குமாறு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தேவையான மணல் மூட்டைகள், காலி கோணிகள் மற்றும் சவுக்கு கம்புகள் ஆகியவற்றை பருவமழையினை எதிர்கொள்ள ஏதுவாக ஆங்காங்கே போதுமான இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நீர்வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க. மணிவாசன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சா. மன்மதன், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் திருமதி. மு.ஜானகி மற்றும் அனைத்து சென்னை மண்டல பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில், நேற்று (10.09.2024) சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட 5 மாவட்டங்களில் நடைபெற்று வரும் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து நீர்வளத் துறை பொறியாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க. மணிவாசன், நீர்வளத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) எஸ். மன்மதன், நீர்வளத்துறை சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் ஆ. ஜானகி மற்றும் அனைத்து சென்னை மண்டல பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அறிவிப்பின்படி பவள விழாவை முன்னிட்டு

# கழகத்தினர் இல்லங்களில் கழகக் கொடிகளை ஏற்ற வேண்டும்!

## மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவள்ளூர், செப்.11



தந்தை பெரியாரின் கொள்கைகளை ஜனநாயக வழியில் சட்டங்களாகவும் திட்டங்களாகவும் நிறைவேற்றிடும் நோக்கத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டிக்காக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் பேரியக்கம், 75 ஆண்டுகளாக மக்களுக்குப் பணியாற்றி, இந்த 2024ஆம் ஆண்டு தனது பவள விழா நிறைவினைக் கொண்டாடுகிறது.

“பவளவிழாவையொட்டி கழகக் கொடிக் கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, அதில் அந்தந்தப் பகுதியில் கழகத்திற்காக அல்லும் பகலும் உழைத்த மூத்த முன்னோடிகளின் கரங்களால் நம் இரு வண்ணக் கொடியை ஏற்றிப் பட்டொளி வீசிப் பறந்திடச் செய்திட வேண்டும்” என மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துக் கொண்டார் அதன்படி நமது மாவட்டத்தில் கழக முத்த நிர்வாகிகள் வைத்து வார்டு கிளைக் கழகங்களில் கொடியேற்று நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது இதனை தொடர்ந்து

திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகங்களில் உள்ள கழகத்தினர் பவளவிழாவை முன்னிட்டு நம் அனைவரது இல்லங்கள் அலுவலகங்கள் கழகக் கொடி ஏற்றிக் கொண்டாடுவோம் என திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கழக நிர்வாகிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி கோரிக்கை மனுக்கள் பெறும் நிகழ்ச்சியில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக 3 பயனாளிகளுக்கு ரூ.2.03 இலட்சம் மதிப்பீட்டில் செயற்கை கால்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், ஊராட்சி ஒன்றியக்குழு பெருந்தலைவர்கள் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், உதயா கருணாகரன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், எம்.கே.டி.கார்த்திக், நகர்மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், மண்டல குழுத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் உள்ளனர்.

### மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.சிறப்புரை!

# காஞ்சிபுரம் மாநகர தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் அறிக்கை!

காஞ்சிபுரம்,செப்,11

காஞ்சிபுரம் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச் செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகர தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (12.9.2024வியாழக்கிழமை) மாலை 4.30 மணிக்கு காஞ்சிபுரம்,ஏ.கே.ஜி.திருமண மண்டபத்தில் நடைபெறிகின்றது.

நான் (மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன்) அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறேன்.

ஏ.எஸ்.முத்துச்செல்வன், வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சுப்பராயன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுகிறார்.

இதில் மாவட்ட துணைச் செயலாளர் சிறுவேடல் க.செல்வம் எம்.பி.,மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன்,எம்.எல்.ஏ., மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் கே. ஆறுமுகம்,

ஜி.சுகுமாறன்,தி.அன்பழகன்,பெ.சுந்தரவதனன்,வி.எஸ்.ராமகிருஷ்ணன்,எஸ். கே.பி.சீனிவாசன்,எஸ்.சிகாமணி, கே.திலகர்,எஸ்.சந்துரு,அ.தசரதன்,சு.வெங்கடேசன், அ.யுவராஜ், நாத்திகம் நாகராஜன், கே.ஏ. இளங்கோவன்,வ.மலர்மன்னன், ஏ.செல்வி,டி.ஜெய்கணேஷ், டி.வெங்கட்ராமன்,பி.எஸ்.ரமேஷ்,சசிகலா கணேஷ்,சாந்தி சீனிவாசன், செவிலிமேடு எஸ் மோகன், எஸ்.சுகுமாறன், த. விஸ்வநாதன்,எஸ்.மாமல்லன்,ப.சுரேஷ்,பி.சங்கர்,எஸ். ரவிக்குமார், ஜெ.வரதராஜன், எஸ்.சேகர்,அ.பாலமுருகன் உள்பட மாவட்ட அணிகளின் நிர்வாகிகள்,மாநகர பகுதிக் கழக நிர்வாகிகள், மாநகர வட்டக் கழகச் செயலாளர்கள், மாநகராட்சி வட்டக் கழகச் செயலாளர்கள், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

எஸ்.ஸ்ரீபால் நன்றி கூறுகிறார்.

கழக முப்பெரும் விழா,, கழக பவளவிழா ஆண்டு, கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருப்பதால் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.


